IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, ARNI, T.V.M.DT.
DEPOSITION OF WITNESS
(As per XXIII case of Criminal procedure)
SESSIONS CASE NO. 48/2021

Deposition of witness for prosecution : PW 3
Defense :
Name : சிவக்குமார்
Father's Name : ஆனந்தன்
Village :
Taluk : ஆரணிபாளையம்
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.11.2022

முதல் விசாரணை

1. நான் பழைய ஆர்காடு சாலையில் ஆரணியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1, அ.சா.2 எனக்குத் தெரியும். அ.சா.1 கார் ஓட்டுனராக வேலை செய்து வருகிறார்.

2. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. அ.சா.1 சுந்தருக்கு எதுவும் நடக்கவில்லை.

3. **அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அதனை தொடர்ந்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

4. நான் போலிஸ் விசாரணையின் போது 26.09.2020 அன்று காலை 8.00 மணி அளவில் ஆரணி டவுன் காமராஜர் சிலை அருகில் தள்ளுவண்டியில் அ.சா.1 வாழைப்பழம் வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.

5. அன்றைய தினம் அந்த நேரத்தில் எதிரிகள் இருவரும் டி.என்.73எஎ9357 என்ற இருசக்கர வாகனத்தில் வந்து அ.சா.1யிடம் ரூ.1000/- கேட்டு தகராறு செய்தார்கள் என்றால் சரியல்ல.

6. அவ்வாறு அ.சா.1 ரூ.1000/- கொடுக்க மறுத்ததால் 1ம் எதிரி தன்கையில் வைத்திருந்த பட்டா கத்தியை காட்டி அ.சா.1 ஐ மிரட்டினார் என்றால் சரியல்ல. அப்போது எதிரிகள் இருவரும் அ.சா.1ன் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.1,650/-ஐ அ.சா.1 யிடமிருந்து கொள்ளை அடித்துக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அப்போது 1ம் எதிரி ராமு தன் கையில் வைத்திருந்த பட்டா கத்தியை எடுத்து அ.சா.1 ன் வலது கையில் கிழித்து காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

7. அந்த சமயம் 2ம் எதிரி அ.சா.1 ஐ பார்த்து எங்களை யார் என்று தெரியாதா என்று அசிங்கமாக திட்டியும் அவரது வலது கையால் அ.சா.1 ன் இடது பக்க கன்னத்தில் அடித்தார் என்றால் சரியல்ல. அப்போது 2ம் எதிரி அ.சா.1 ன் இடதுகையில் கட்டியிருந்த கைகடிகாரத்தை கழட்டி கொடு என்று சொல்லி பறித்துக்கொண்டார் என்றால் சரியல்ல.

8. அப்போது அ.சா.1 ன் கூச்சல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் ஓடி வந்தவுடன் 1ம் எதிரி பட்டா கத்தியால் அ.சா.1 ஐ வெட்ட வந்தார் என்றும் அ.சா.1 ஒதுங்கி கொண்டதால் பட்டா கத்தி அ.சா.1 ன் தள்ளுவண்டியின் மீது பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு அ.சா.1 ஒதுங்கி போகவில்லை என்றால் அந்த பட்டா கத்தி அ.சா.1 ன் தலையில்பட்டு அவரது உயிர்போயிருக்கும் என்றால் சரியல்ல.

9, அப்போது 1ம் எதிரி பட்டா கத்தியை வைத்து இருசக்கரவாகனத்தில் தீப்பொறி கிளம்பும் அளவிற்கு வேகமாக உரசினார் என்றும், 2ம் எதிரி தனது இருசக்கர வாகனத்தில் வைத்திருந்த சோடா பாட்டில்களை எடுத்து ரோட்டில் போட்டு உடைத்து பொது மக்களை பயமுறுத்தினார் என்றால் சரியல்ல.

10. அ.சா.1 பயந்து சம்பவம் பற்றி ஆரணி நகர காவல் நிலையம் சென்று அ.சா.1 யிடம் ரூ.1,650/- மற்றும் கை கடிகாரத்தை பறித்துக்கொண்டு கொலை மிரட்டல் விடுத்ததாக 26.09.2020 அன்று ஆரணி நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

11. சம்பவம்பற்றி எனக்கு நேரடியாக தெரியும் என்றும்ஆனால் தற்போது நடந்த உண்மை சம்பவங்கள் அனைத்தையும் மறைத்து எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்துடன் உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

மறு விசாரணை இல்லை.